## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**நாள்** 25.10.2025

**அசல் வழக்கு எண்.244/2024**

**பி.சா.1 – லட்சுமி நரசிம்மன், த/பெ.ராஜகோபாலன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

வழக்கில் நீங்கள் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் நீங்கள் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள சங்கதிகளை நீங்கள் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டீர்கள் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் சர்வே எண் 563ல் அடங்கிய வழக்கு சொத்து முதலில் உங்கள் பாட்டினார் சந்தானகோபால் ஐயங்கார் என்பவருக்கு சொந்தமானது என்று நீங்கள் சொல்லி உள்ளீர்கள் அதற்காக ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தின் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. உங்கள் தரப்பில் கடந்த 28.06.1991 உங்கள் பாட்டனர் சந்தானகோபால் உயில் சாசனம் ஒன்றை எழுதி வைத்ததாக நீங்கள் கூறுகிறீர்கள் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. இப்பொழுது நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் உடைய பட்டா யார் பெயரில் இருக்கிறது என்றால் என்னுடைய பெயர் லட்சுமி நரசிம்மன் மற்றும் என்னுடைய சகோதரர் ரகுநந்தன் ஆகிய இருவர் பெயரிலும் உள்ளது. அந்தப் பட்டாவை நீங்கள் வழக்கில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. பட்டா எண் சொல்ல முடியுமா என்றால் பட்டா எண் ஞாபகம் இல்லை. சர்வே எண் 563 ஆகும். வழக்கு சொத்தின் நீளம் அகலம் ஆகியவற்றை குறிப்பிட்டு காட்டுவதற்கு நீங்கள் என்ன ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் கடந்து 2004 ஆம் ஆண்டு எங்களுக்கு இடையே பாகம் பிரித்துக் கொண்டதற்கான பாகப்பிரிவினை ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தினுடைய எஃப் எம் பி ஸ்கெட்ச் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் நீங்களும் உங்கள் சகோதரர் ரகுநாதன் மற்றும் உங்கள் தாயார் ஆனந்தவல்லி ஆகியோர்

குடியிருப்பதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு நீங்கள் வழக்கு சொத்தில் குடியிருப்பதற்கான ஆதாரம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த கட்டிடத்திற்கு மாநகராட்சி வழங்கி அங்கீகாரம் வரைபடம் ஏதேனும் உள்ளதா என்றால் இருக்கிறது ஆனால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்து நூறு ஆண்டுகள் பழமையான கட்டிடம் என்றால் சரிதான். வழக்குரையில் பிரதிவாதிகளின் ஊழியர்கள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து விட்டதாக சொல்லி உள்ளீர்கள் எப்பொழுது எந்த தேதியில் யாரெல்லாம் நுழைந்தார்கள் தெரியுமா என்றால் புகைப்படங்கள் இணைத்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்த 08.08.2023 தேதியிட்ட புகைப்படத்தில் பிரதிவாதிகள் யாராவது இருக்கிறார்களா என்றால் அதில் பிரதிவாதிகளுடைய புகைப்படம் இல்லை. வீடு தெரிகிறது பிரதிவாதிகளுடைய முகம் தெரியவில்லை. அந்த புகைப்படத்தில் உங்கள் வீட்டில் யாராவது இருக்கிறார்களா என்றால் இல்லை. நான் தான் எடுத்தேன். அதே போல் மேலும் நீங்கள் ஆறு புகைப்படம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் நீங்களும் உங்கள் சகோதரரோ பிரதிவாதிகளோ அவர்களுடைய ஆட்களோ யாராவது இருக்கிறார்களா என்றால் இல்லை. அத்துமீறிவிட்டதாக கூறும் நீங்கள் அதற்காக காவல் நிலையத்தில் புகார் செய்தீர்களா என்றால் செய்துள்ளேன். அந்த புகார்நகல், சிஎஸ்ஆர் நகல் அல்லது எஃப் ஐ ஆர் நகல் நீதிமன்றத்தில் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் செய்யவில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.